

For the Peace of Mind - Fr. Damian

June - July 2011



வாசகர்களின் இதயத் துடிப்பு

# அலை ஓசை

இதழ் 03

**FREE ISSUE**

Fr. Damian உடனான உளவியல் பற்றிய சிறப்பு நேர்காணல்.

பக்கம் 22

கலாச்சாரம் போகும் போக்கு?

பக்கம் 12

இலவசம்


AP KITCHEN LAPTOP வழங்கும் Induction Cooker

பக்கம் 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Contents


| | |
|---|---|
| Beauticians | 5, 9, 13, 21 |
| Business | 18, 21, 41, 44 |
| Children's Creations | 28 |
| Construction | 47 |
| Domestic | 8, 16, 31, 32, 34, 38, 39 |
| Education | 7, 20, 23, 27 |
| Electronics | 8, 11, 37, 39 |
| Entertainment Article | 12, 40, 37, 39, 42, 46 |
| Finance | 3 |
| IT Solution | 19, 37, 38, 39 |
| Literature | 30, 40 |
| Medical | 36 |
| Psychology | 22 |
| Restaurant | 35 |
| Science & Technology | 6 |
| Shopping | 44 |
| Studio | 9 |
| Textile & Shoppings | 1, 15, 24, 25, 45 |
| Travel & Tours | 43 |



**ATA Aspirations (Pvt.) Ltd.**

No. 122/B, Galle Road, Dehiwala South,
Colombo, Sri Lanka.
Tel: 011 272 2990, 011 720 7989
Hotline: 077 493 9756
Email: info@ataaspirations.com
Web: www.ataaspirations.com


## வளர்ச்சிப்படிகளில்....

அலை ஓசை எனும் இவ் ஒலியிதழ் தனது மென்மையான தேமதுர ஓசையினால் எல்லோர் அறிவியல் மனங்களிலும் தேடலினை ஆரம்பித்து வியாபித்து தனது மெல் அலையினை பரவவிடத்தொடங்கியிருக்கிறது. அலை ஓசை இன்று யாழ்ப்பாணம் கொழும்பு வவுனியா கிளிநொச்சி என்று ஈழத்திருநாட்டில் மட்டுமன்றி UK, France, Doha என்று தனது கரங்களை நீட்டி கிளை பரப்பத் தொடங்கியிருக்கிறது.

ஆம் எல்லோரும் சொல்லும் கருத்து ஒன்று அலை ஓசையைப்போன்று எத்தனை இதழ்கள் வெளிவந்த போதும் எவ்விதழிலும் இல்லாத ஏதோ ஒன்று அலை ஓசையில் எம்மைக் கவாந்திருக்கின்றது என்று. ஆம் அது என்னவென்று வாசகர்களுக்கும், அலை ஓசையில் விளம்பரத்தினைத் தந்து இன்று தமது வர்த்தகத்தினை விருத்தி செய்து திருப்தியடைந்த வர்த்தகர்களுக்கும் புரியும்.

ஆம் அலை ஓசையில் பலர் தமது விளம்பரங்களினைத் தரமுன்வந்தபோதும் அலை ஓசை தனது விளம்பர நிறுவனங்களினை மட்டுப்படுத்தி வைத்திருக்கிறது. ஏனெனில் அலை ஓசை தனித்து விளம்பரப் புத்தகமட்டுமன்றி வாசகர்களிற்கும் தமிழ் உலகிற்கும் சில விடயங்களை அறிவை வளர்க்கவுள்ள கட்டாயமுள்ளது. எனவே மேலதிக விளம்பரதாரர்களின் மனம் கோணாது அவர்களுக்கான சந்தர்ப்பம் தொடர்ந்து சுழற்சி முறையில் அவர்களிற்கு கொடுக்கப்படும். எனவே பொறுத்திருங்கள் உங்கள் சந்தர்ப்பத்திற்காக. நாமாக உங்களை தொடர்பு கொள்ளவில்லையெனில் நீங்களாகவே எமது அழைப்பிலக்கத்தினை அழுத்துங்கள் உங்கள் வர்த்தகத்தினை விருத்தி செய்யும் சந்தர்ப்பத்திற்கு.

நுகர்வோர் தமக்குரிய தெரிவினை சுதந்திரமாக தெரிவுசெய்யும் சுதந்திரம் அவனுக்குண்டு. எனவே இன்று இந்த Market Structure இல் அலை ஓசை உற்பத்தியாளன் நுகர்வோர் இருவருக்கும் ஊடகமாக இருந்து ஒரு தெளிவினைக் கொடுக்கிறது.


இந்த நிறைபோட்டிச்சந்தையில் பொருட்களை வழங்கும் நிறுவனங்களின் பொருள் தரம் தன்மை பெருமளவிற்கு ஒரே தன்மையுடையதாக இருக்கின்ற போது அந்தப் பொருட்கள் சந்தையில் முன்னிடம் வகிக்க விளம்பரம் ஒன்று இன்றியமையாதது. விளம்பரம் நிறுவனங்களின் உற்பத்தியினை அதிகரிக்கின்றது. இதன் காரணமாக நிறுவனத்தின் இலாபம் அதிகரிக்கின்ற அதே சந்தர்ப்பத்தில் நுகர்வோருக்கும் இருந்த இடத்திலேயே பொருள் பற்றிய நிறுவனம் பற்றிய விளக்கத்தினைக் கொடுக்க அலை ஓசை தனது சேவையினை வியாபிக்கின்றது.

எனவே இன்று அலை ஓசையில் விளம்பரம் தந்த நிறுவனங்கள் வாசகர்கள் வளர்ச்சிப்படிகளினை நோக்கிச் செல்கின்றனர் அலை ஓசையின் வாசகர்களின் உளத்திருப்தியே அலை ஓசையின் வெற்றி. எனவே அலை ஓசையும் தனது ஓசையின் வளர்ச்சிப்படியில் நடைபயில்கின்றது.


அலை ஓசை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 4 DRIVE

## வீதி பாதுகாப்பு விதிகளும் வீதியினை பாவிப்பவர்கள் விடும் தவறுகளும்

## (Road Safety Rules and Common Mistakes)

சாதாரணமாக எமது Driving Position வாகனங்களை எப்போதும் இடது பக்கமாகவே செலுத்த வேண்டும் என்பதுதான். இது எதிர்ப்புறமாக வரும் வாகனங்களிற்கு இடமளிப்பதாக இருக்கும்.



வாகனங்களினை வீதியின் நடுப்பகுதியினால் செலுத்தும் போது வளைவுகளில், ஏற்ற இறக்கமுள்ள உயர்வான பகுதிகளில் ஏறும்போது எதிர்ப்புறமாக வரும் வாகனம் எமது பார்வைக்குள் வராது இது ஆபத்தான விபத்துக்கு வழி வகுக்கலாம். தனித்து ஓர் lane இல் உள்ள வீதியில் இந்த விதி மிகவும் அவதானமாக பின்பற்றப்பட வேண்டும். இரண்டு lane உள்ள வீதிகளில் left lane சாதாரண-மாக வாகனங்களை செலுத்தவும் அடுத்த lane இனை over take எடுக்கவும் உதவும். இரண்டு lane உள்ள வீதிகளில் பிரயாணத்திட்டத்தின்படி உங்களது left exit (Side Road) அண்மித்து விட்டதாயின் திடீரென



உங்களது திரும்புகையினை மேற்கொண்டு வாகனங்களின் வேகத்தினைக் குறைக்கும் போது பிற வாகன சாரதிகளிற்கு இது இடையூறாக இருக்கும் எனவே வாகனத்தின் Signal Light (See Image 1) இனை தகுந்த நேரத்தில் போட்டு Bend இன் வளைவிற்கேற்ப உங்கள் வாகனத்தின் வேகத்தினை மட்டுப்படுத்த வேண்டும். Manual Car உடன் Sharp Bend ஆயின் முதலாவது Gear பொருத்தமானதாகவும் Wide Bend ஆயின் 2nd Gear பொருத்தமானதாகவும் இருக்கும். வளைவில் திரும்ப முன்னர் ஒரு கார் தூரத்திற்கு முன்னரே அதற்குரிய Gear மாற்றம் செய்து தகுந்த வேகத்தில் வர வேண்டும்.

Gear இனை மாற்றாது வளைவுகளில் உங்கள் வேகத்தினைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதிற்கு Brake இனை மட்டும் அழுத்துவது பிழையான ஒன்றாகும். அதேவேளை





இல் திரும்பும் போது பல சாரதிகள் வாகனத்தில் Cluch இனை முழுவதுமாக அழுத்துகின்றனர் இது மிகவும் பிழை-யான ஒன்று. இது வாகனத்தினை Bend இல் வேகமாக்குவதுடன் மட்டுமல்லாது வாகனத்தின் எரிபொருட் பாவனையையும் அதிகரிக்கிறது.

வாகனங்களை ஓட்டும் போது Brake ஐயும் Cluch ஐயும் ஒரே நேரத்தில் அழுத்துவதினை பெருமளவில் குறைப்பது நல்லது.

33 ஆம் பக்கம் பார்க்க..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WIFI! Technology



Wireless Internet ஐ பயன்படுத்தும் அனேகமான மக்களிற்கு பரீட்சயமான ஒரு Technology தான் இந்த Wi-Fi Technology. 15 வருடங்களுக்கு முன்னர் மேல்மாடியில் உள்ள Entertainment System இல் உள்ள பாடல்களை Basement இல் உள்ள Computer இல் கேட்க முடியும் என்றோ, Wi-Fi Enabled MP3 Player இல் பாடல்களை பதிவிறக்கம் (Download) செய்ய முடியும் என்றோ நினைத்திருக்க மாட்டோம். ஆனால் தற்போது அது மட்டுமல்ல அதற்கும் மேலான செயற்பாடுகளைக் கூட இந்த Wi-Fi Technology இனால் செய்யமுடிகிறது.

Wi-Fi ஆனது மிகவும் பிரபல்யமான Wireless Communication Standards இனுள் ஒன்றாகும் இந்த Wi-Fi Technology ஆனது முதலில் Laptop Computers ஐ Local Area Network (LAN) Internet உடன் Connect செய்யமட்டும் பயன்படுத்தப்பட்டது. தற்போது இந்த Wi-Fi Technology ஆனது Computer அல்லாத இலத்திரனியல் கருவிகளில் கூட பயன்படுத்தப்படுகிறது என்பதே அதன் சிறப்பம்சமாகும்.

உதாரணமாக
Home Theater Receivers, Portable gaming devices, DVD Players, Digital Cameras, GPS Devices என்பவற்றை குறிப்பிடலாம்.




## WIRELESS STANDARDS

இந்த Wireless Standards ற்கான சட்டரீதியான பெயர் IEEE 802.11 அத்தோடு இது 20 ற்கு மேற்பட்ட வேறுபட்ட Standards இனால் சேர்க்கப்பட்டிருப்பதுடன் ஒவ்வொரு Standards உம் IEEE 802.11 இன் இறுதியில் இடப்படும் Alphabet Letter இனால் வேறுபடுத்தப்படுகிறது. அந்தவகையில் மிகவும் பரீட்சயமான இரண்டு Standards தான் 802.11b and 802.11g (Wireless B and G) அனேகமான Wi-Fi உபகரணங்களில் பயன்படுத்தப்படுகிறது. இந்த இரு Standards உம் 2.4 GHz இல் இயங்குகின்றன. இந்த இரண்டுக்கும் இடையிலான ஒரே ஒரு வேறுபாடு அவற்றின் Transfer Rate தான்.

சில இலத்திரனியல் கருவிகளில் வித்தியாசமான Standards ஆன IEEE 802.11a (Wireless A) 5GHz இல் பயன்படுத்தப்படுகிறது.

10 ஆம் பக்கம் பார்க்க..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ATA
ATA Aspirations (Pvt) Ltd.
Destination of Dreamlness

# STUDY in UK, Polond

Our SERVICE ABSOLUTELY Free


நீங்கள் விரும்பும் எந்தவிதமான
கற்கை நெறியாயினும்

No Need IELTS

ஆகக்குறைந்த
கல்வித் தகைமை

GCE A/L 2 Passes

லண்டனில் உயர்கல்வி தொடர்பாக
இலவச ஆலோசனைகள் வழங்கப்படும்.



City & Guilds Approved Centre


ATA Aspirations(Pvt)Ltd


No. 122B, Galle Road, Dehiwala South, Colombo, SriLanka.
Tel: 011 272 2990, 011 720 7989 M: 077 4939756
Email: info@ataaspirations.com Web: www.ataaspirations.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் Transfer Rate 802.11g இற்கு இணையாக இருந்த போதிலும் இவை வித்தியாசமான Frequency இல் இயங்குவதால் 802.11a Standards இனால் 802.11b, 802.11g இல் இயங்கும் உபகரணங்களுடன் தொடர்புகொள்ள முடிவதில்லை எனவே ஒரு Wi-Fi கருவியை வாங்கும் போது உங்களது Wireless Networks க்கு அது பொருத்தமானதா என்பதை முதலில் கவனத்தில் கொள்ள வேண்டும்.



Comparison of Standards

கீளுள்ள Table ஆனது மிகவும் பிரபல்யமான மூன்று 802.11 Standards இனதும் அடுத்த Version ஆன Wi-Fi 802.11n இனது அடிப்படை விடயங்களை தருகிறது.

| Standards | Frequency | Data Transfer Rate (min-Max) | Range (Indoor) |
|---|---|---|---|
| 802.11a | 5Ghz | 25-50 Mb/s | 10 m |
| 802.11b | 2.4 | 6.5-11 Mb/s | 30 m |
| 802.11g | 2.4 | 25-54 Mb/s | 30 + m |
| 802.11n * | 2.4 | 200-540 Mb/s | 50 m |

## Wi-Fi இன் நன்மைகள்

### Unparalleled Mobility and Flexibility

சுவர்களினுடான Wires இன் சிக்கல்களின்றி Receiver ஐ இன்னொரு Room ற்கு என்றாலும் இலகுவாக கொண்டு செல்லக்கூடியது.

### Quick, Easy Setup

Wi-Fi Network க்கு Professional ஆன Installotion தேவையில்லை இலகுவாக Plug and Play மூலமாக உடனடியாக பயன்படுத்திக் கொள்ளலாம்.

### Fast Data Transfer Rates

இங்கு Transfer Speed 54 Mb/s ஆக இருக்கிறது. 802.11g ஆனது தற்போது உள்ள மிக வேகமான Wi-Fi Protocol ஆக காணப்படுகின்றது.

## Wi-Fi இன் எல்லைகள்

இந்த Wi-Fi இல் Security யும் Interference உம் பிரதான பிரச்சனைகளாக உள்ளன.

### Security Concerns

Wi-Fi Access Points பாதுகாப்பு முறையான Encryption உடன் Box இல் இருந்து வருவதில்லை. இதனை நாங்கள் எமது Computer இல் இருந்தே செய்யக்கூடியதாக இருக்கும்.

Hackers இன் Attacks உம் இவ்வாறான Device க்கு அதிகமாக உள்ளது. அங்கீகரிக்கப்படாத Computers கூட Wi-Fi இன் Bandwidth ஐக் கைப்பற்றி முழுநன்மைகளையும் பெறக்கூடியதாக இருக்கிறது. சிறந்த Wireless Networks encryption ஐ பயன்படுத்துவதன் மூலம் Wi-Fi Device ஐ பாதுகாத்துக் கொள்ளலாம்.

Eg: Wi-Fi Protected Access (WPA2)

### Interference from other Devices

Wi-Fi Transmissions ஆனது 2.4 Ghz இல் இயங்குகிறது. இது மற்றைய Device ஆன Bluetooth Wireless Enabled Devices, Cordless Telephones, Micro Wave, Ovens, Baby Monitors இனையும் Interference செய்வதனால் ஒழுங்கான முறையில் முழுப்பயன்பாட்டையும் பெறமுடிவதில்லை.

## Wi-Fi Future 802.11n

தற்போதுள்ள Wi-Fi Devices (802.11g) Standards ஐ விட 10 மடங்கு அதிகமான அளவில் அதே நேரத்தினுள் தகவல் Transfer பண்ணப்படவேண்டும். இது சாத்தியமானது ஒன்றே. Wi-Fi பற்றிய அடிப்படைவிடயங்களையே நான் இங்கு தந்துள்ளேன். Wi-Fi பற்றிய ஆதாரபூர்வமான உங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. மு

## இணையத்தை பாதுகாப்பாக பயன்படுத்துவதற்கு

இணையத்தைப் பயன்படுத்துபவர்கள் எந்த தளத்திலிருந்து வைரஸ் வரும் என்று பயந்துகொண்டே இருப்பார்கள்.

உண்மையில் நமக்கு ஒன்றுமே தெரியாது. இந்த தளத்தில் நுழைந்தால் வைரஸ் வரவேற்கும் என்று இதனைத் தடுக்கும் அளவுக்கு நம்மிடம் அன்டிவைரஸ் மென்பொருள்கள் இருக்க வேண்டும். அதுவும் இணைய பாதுகாப்பை வழங்குவதாக இருக்க வேண்டும். சாதாரண அன்டிவைரஸ் பேக்குகள் கணணியிலுள்ள வைரஸ், மால்வேர்கள் இவைகளை மட்டுமே சாப்பிடும்.

நீங்கள் இணையத்தில் குறிப்பிட்ட தளத்திற்குச் செல்லும் போது அந்த தளம் பாதுகாப்பானதா என்று தெரிந்தால் நல்லது. இல்லாவிட்டால் பலிகொடுக்க வேண்டியதுதான். இதைத்தான் URL Scanning என்று சொல்வார்கள்.

உங்களிடம் இருக்கும் அன்டிவைரஸ் மென்பொருள் இந்த Interner Security விடயத்தைத் தராமல் இருந்தால் என்ன செய்வது? பாதுகாப்பாக எப்படி இணையத்தைப் பயன்படுத்துவது என்ற கேள்விகள் எழலாம்.

இணைய உலவிகளுக்கென Bit Defender அன்டிவைரஸ் நிறுவனம் Traffic Light என்றொரு நீட்சியை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் நீட்சியை நாம் பயன்படுத்தும் உலவியில் சேர்த்துக் கொண்டால் இணையப் பாதுகாப்பை மேம்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் வேறேந்த அன்டிவைரஸ் மென்பொருள் போட்டிருந்தாலும் இதனைத் தாராளமாக பயன்படுத்தலாம். இதன் அம்சங்கள் என்னவென்று பார்ப்போம்.

1. விண்டோஸ் கணனியின் எந்த உலவியையும் ஆதரிக்கிறது. இதற்கு தனிப்பட்ட உலவியைச் சார்ந்து நிறுவாமல் விண்டோஸ் கணனிக்கு என்று (Windows Installer) நிறுவிக் கொண்டால் உங்கள் கணனியில் எந்த உலவிக்குச் சென்றாலும் இயங்கும். (Firefox, Opera, IE, Safari, Chrome)

2. நீங்கள் எந்த ஒரு இணையதளத்தையும் அடையும் முன்னர் அது பாதுகாப்பானதா என்று சோதித்து சொல்லிவிடுகிறது.

3. கூகிள் தேடலைப் பாதுகாப்பானதாக செய்கிறது. கூகிள் தேடலின் போது வரும் ஒவ்வொரு முடிவுகளுக்கும் முன்பாக அது பாதுகாப்பான தளமாக இருந்தால் பச்சை நிறத்தில் டிக் செய்யப்பட்டு காட்டுகிறது.

4. இணையத்தில் மால்வேர் மற்றும் போலியான தளங்கள் (Phishing Websites) போன்றவற்றை முன்கூட்டியே எச்சரிக்கிறது. Phising Sites - சில தளங்கள் நீங்கள் கணக்கு வைத்துள்ள வங்கியின் தளம் போலவே தோற்றமளித்து உங்களின் தகவலையும் பணத்தையும் திருடுவார்கள்.


5. சமூக வலைத் தளங்களில் உள்ள அபாய பக்கங்களையும் எச்சரிக்கிறது.

6. ஒருவேளை குறிப்பிட்ட இணைய தளத்தின் சில பக்கங்கள் தீங்கின்றி இருந்தால் அதை அனுமதிக்கிறது.

விண்டோஸ் இயங்கு தளங்களில் மட்டுமே செயற்படுகின்ற இந்த நீட்சி அருமையான பயன்படுத்திப்பார்க்க வேண்டிய ஒன்றாகும்.

நன்றி www.bitdefender.com

IMMEDIATE
VACANCY
GRAPHIC DESIGNER
with one year experience
CONTACT: 011 720 7989








Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கலாச்சாரம் போகும் போக்கு



'உங்கள் நிழல்'



காலங்காலமாக இலங்கை தமிழர்கள் என்ற இனம்சார் குழுமத்தின் கலாசார அடையாளமாக யாழ்ப்பாணம் விளங்கிவந்தது ஆனால் இன்று.....? கலாச்சாரம் என்பது வெறும் ஒருவரது உடை மட்டும் சம்பந்தப்பட்டதன்று ஒவ்வொருவரது மனதின் வெளிப்பாடு. இன்று நம்மில் பலர் மேலை நாட்டு கலாச்சாரத்தினை Copy பண்ணுவதுதான் நாகரீகம் என்று பிழையான எண்ணத்தினை கொண்டிருக்கிறனர்.

உண்மையில் அப்படியல்ல மேலைநாட்டவரது நடை உடை பாவனை அவர்களது கலாச்சாரத்தினை பிரதிபலிப்பதாக இருக்கிறது. அதுதான் நாகரீகம் என்று எம்மக்கள் நினைக்கின்றனரே அதுதான் பிழையான கருத்து அடுத்தநாட்டு கலாச்சாரத்தை மதிக்கத் தெரிந்த மனப்பான்மை எம்மில் வரவேண்டுமே தவிர அதனை பின்பற்றுவதுதான் நாகரீகம் என்ற எண்ணம் களையப்படவேண்டும். மேலைநாட்டவர்கள் எமது கலாச்சாரத்தினை மதிக்கத்தெரிந்த மனப்பான்மை கொண்டவர்கள் அதற்கு உதாரணம் அபிவிருத்தியடைந்த மேற்கத்தேய நாடுகளில் புலம்பெயர்ந்தது வாழும் எமது தமிழ் உறவுகளிடமே கேட்டுப்பாருங்கள் எத்தனை ஐரோப்பிய நாட்டவர் எம்மவர்களிடம் "ஆகா எத்தனை அழகான தேசிய உடை உங்களது ஆகா உங்களது முக்கியமான நிகழ்வுகள் எமக்குப் பிடித்திருக்கின்றது என்று எமது கலாச்சாரத்தினை மதிக்கத்தெரிந்த மனப்பான்மை கொண்டவர்கள். ஆனால் நம்மவர்கள் எமது தேசிய உடையுடன் போனால் எம்மை பட்டிக்காடு என நினைப்பார்கள் என்று. அது அப்படிக் கதைப்பவர்களின் அறியாமை. இவ்விடத்தில் எனக்கு ஓர் ஞாபகம் வருகிறது.

கலாச்சாரம் என்பது ஒவ்வொரு நாட்டிலும் அந்தந்த இனமக்களின் தனித்துவத்தினைப் பிரதிபலிப்பது ஆகும். அவர்களது நடை, உடை, பாவனை, பழக்கவழக்கம், பண்பாடு போன்ற விடயங்களினை உள்ளடக்கியது ஆகும். இன்று உலகமயமாக்கல் (Globalization) மூலம் இனங்கள் ஒவ்வோர் இனங்களுடன் கலந்து தமக்குரிய தனித்துவத்தினை இழந்தாலும் முக்கியமான தமது பண்பாட்டு நிகழ்வுகளில் இன்றும் அதனை நிலைநிறுத்துகின்றனர். திருமணநிகழ்வு, இறந்தநாள் நிகழ்வு, பிறந்தநாள் இவ்வாறு நிகழ்வுகளில் அந்த இனங்கள் கலாச்சாரத்தினை நிலைநிறுத்துகின்றனர்.

14 ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இரு பெண்களின் உரையாடல்

யாழ்ப்பாணத்தில் பிறந்த இரு மாணவிகள் பேராதெனிய பல்கலைக்கழகத்தில் இணைந்தார்கள். ஒருவர் எப்போதும் சல்வார் தான் அணிவார் மற்றைய மாணவி ஜீன்ஸ், T Shirt, Skirt என்று வகை வகையாக அணிவார். இது அவர்களது விருப்பம் இதைப் பற்றி நான் இங்கு எதுவும் குறிப்பிடவில்லை. ஜீன்ஸ், T Shirt அணியும் மாணவி சல்வார் அணியும் மாணவியைப்பார்த்து கேட்டார் "நீர் இந்த சல்வாரை விடமாட்டீரா மற்ற Students உம்மை பட்டிக்காடு என்றும் நாகரீகம் தெரியாதவர் என்றும் நினைக்கமாட்டார்களா! சல்வார் அணிந்து வரும் மாணவியும் சளைத்தவரல்ல அவர் கூறினார் நாகரீகம் என்பது நீர் சொல்வது போல் இருந்தால் Jappan ற்கு சென்றால் நீர் Himono அணிவீரா பழங்குடிமக்கள் வாழும் பிரதேசத்துக்குப் போனால் அவர்கள் அணியும் அடைகளை அணிவீரா. அது அவர்களது National Dress அதே போல் அந்தந்த நாடுகளில் நாம் எமது தேசிய உடையை அணியும் போது அவர்கள் நம்மை திரும்பிப் பார்த்து வியக்கும் அளவிற்கு இருக்க வேண்டும் எனக் கூறினார்.

இது நிற்க

நான் இதில் சல்வார் Best ஆ ஜீன்ஸ் T-Shirt Best ஆ என்று விளக்கவரவில்லை படித்த பிள்ளைகள் மனநிலையே இவ்வாறு என்றால் மற்றவர்கள்!.. கலாச்சாரம் என்பது அவ்வின மக்களின் நடை உடை பாவனை வெளிப்பாடு, இது மனதளவிலும் முக்கிய இடம் பெறுகிறது. வரவேற்கும் பண்பு, பேசும்முறை, பழக்கவழக்கம், எல்லாம் எமது கலாச்சாரத்தின் பிரதிபலிப்பே. இன்று எமது மக்கள் அவர்கள் அணியும் உடையில்தான் எமது கலாச்சாரத்தினை பிரதிபலிக்க வில்லையே என்று கவலை கொள்ளும் அதே வேளையில் அவர்களது பழக்கவழக்கம் மனதளவிலும் தமது இனத்துவத்தினை தொலைத்து வெகு தூரம் சென்றுவிட்டார்கள். மேலைத்தேய உடைகள் அவசர உலகத்திற்கு இலகு தான் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் எமது உடைகளை நாகரீகம் இல்லையென்று சொல்வது தான் மனதை தைக்கிறது. அந்தந்த நாட்டு மக்களின் கலாச்சாரத்தினை மதிக்கும் மனப்பான்மை ஐரோப்பிய மக்களிற்கு வருவது போல் எல்லாவற்றையும் Copy செய்யும் எம்மவர்களிற்கு ஏன் நல்ல விடயங்களை Copy செய்ய முடியாமலிருக்கிறது.

கலாச்சாரம் என்பது உள்ளகததின் வெளிப்பாட்டினை பிரதிபலிக்கின்றது. நான் இங்கு சேலை, கலாச்சாரமான உடை ஆனால் கலாச்சாரமான உடை அணிபவர்கள் கூட மனதளவில் தமது கலாச்சாரத்தினை தொலைத்திருக்கின்றனர். ஆனால் உள்ளகத்திலும் வெளிப்பாட்டிலும் கலாச்சாரமாக இல்லையென்று சொல்லவில்லை மிக அரிதாகிவிட்டனர். ஆனால் கலாச்சாரமாக உடை அணியாதவர்களில் பலர் மனதளவில் எமது நாட்டு பழக்கங்களில் ஊறி இருப்பதாகக் காணக்கூடியதாக இருக்கின்றது. வெளிப்படையாக தெரியும் நாம் அணியும் ஆடை பிறகலாச்சாரத்தவர் எம்மை மதிக்கும் அளவிற்கு இருக்க வேண்டும். உள்ளக வெளிப்பாடு எமது தமிழர்களின் பழக்கவழக்கம், பாவனை உண்மையிலேயே இனிமையானது. கலாச்சாரமாக உடை அணிபவர்கள் நாம் தப்பித்தோம் என்று நினைக்க வேண்டாம். அவர்களும் மனதளவில் பழக்கவழக்கம் நடை உடை பாவனையில் எமது தமிழர் பண்பாட்டை பிரதிபலிக்க வேண்டும். ஜீன்ஸ் T-shirt போடும் பெண்களும் எம்மீது கோபம் கொள்ள வேண்டாம் உண்மையில் இவர்களில் பலர் இன்றும் சேலை கட்டியவர்களை விட பழக்கவழக்கத்தில் உறுதியாக தமிழ் பண்பாட்டை கடைப்பிடிப்பதைத்தான் காணக்கூடியதாக உள்ளது. ஆண்கள் தப்பித்தோம் என்று நினைக்கவேண்டாம். எல்லோருக்கும் பொதுவான ஒன்றுதான் கலாச்சாரம் ஆண்களுக்கு மனதளவிலான பழக்கவழக்கம் உள்ளகவெளிப்பாடு எமது கலாச்சாரத்தினை பிரதிபலிக்க வேண்டும்.

வெளிப்படையான உடைகளில் கலாச்சாரத்தினை முழுமையாக பிரதிபலிக்க முடியாவிடினும் பழக்கவழக்கம் மனதளவில் எமது கலாச்சாரத்தினை பிரதிபலித்து நடக்க வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன சமையலும் சக்தி சேமிப்பும்

இல்லத்தரசிகளே தினமும் சமையல் உங்கள் போராட்டமா? வெப்பம், தீ, புகை, கரிபடர்ந்த பாத்திரங்களோடு தினமும் போராடுகின்றீர்களா? தினமும் உயரும் எரிவாயுவின் விலை, எரிவாயு சிலின்டர்களை எடுத்துச் சென்று நிரப்பும் வேலை என்பன சமையலை மேலும் மேலும் சிரமமாக்குகின்றதா? சில வீடுகளில் விறகு அடுப்புகளுடன் போராட்டமா? இவற்றை எல்லாம் விட்டு விட்டு மின்சார அடுப்பை பயன்படுத்த நினைத்தால் மின்சாரப்பட்டியல் (Current Bill ) உங்களை பயமுறுத்துகின்றதா? இதற்கு தீர்வு இந்த நவீன விஞ்ஞான உலகில் இல்லையா? இதற்கு பதில் இருக்கிறது என்பது தான். அப்படி என்றால் அது என்ன?

அது தான் Induction Cooker என்று அழைக்கப்படும் புதுமையான மின்காந்த அடுப்பு. Induction Cooker (மின்காந்த அடுப்பு) என்றால் என்ன?
இது ஒரு புதுமையான மின்சார அடுப்பு. மின்சார சக்தியை குறைவாகப் பயன் படுத்தி சமையல் செய்வதற்கு அதிகமான வெப்பத்தை வழங்குகிறது.

## இது எவ்வாறு தொழிற்படுகின்றது?

இந்த மின்காந்த அடுப்பில் முலாமிடப்பட்ட செப்புக்கம்பிச் சுருள்கள் இருக்கின்றது. (Copper coil) இந்த சுருள்களின் ஊடாக மாறுபடும் மின்காந்த ஓட்டம் (Ossicating Current Flow) செலுத்தப்படும் போது அந்த செப்புச்சுருளில் மின்காந்த அலைகள் பிறப்பிக்கப்படுகின்றது. இந்த மின்காந்த அலைகள் அடுப்பின் மீது வைக்கப்பட்டுள்ள இரும்புக்காந்த பாத்திரங்களின் (Ferro magnative pot) (உதாரணமாக- இரும்புப்பாத்திரம், steel பாத்திரம், எவர்சில்வர்ப்பாத்திரம்) ஊடாக செல்லும் போது வெப்பத்தை பிறப்பிக்கின்றது.($I^2R$).

இங்கு நன்கு உற்று நோக்கும் போது வெப்பமானது பாத்திரத்தின் அடிப்பகுதியிலேயே பிறப்பிக்கப்படுகின்றது. அடுப்பில் அல்ல. இவ்வாறு பாத்திரத்தின் அடிப்பகுதியில் பிறப்பிக்கப்படும் வெப்பமானது அப்பாத்திரத்துடன் தொடுகையில் உள்ள உணவிற்கு கடத்தல் முறை மூலம் பரவுகின்றது. இதனால் பிறப்பிக்கப்படும் வெப்பம் முழுவதும் சமையலுக்கே உபயோகமாகின்றது. இதன் போது அடுப்போ, பாத்திரத்தின் மேற்பகுதிகளோ, சூழலோ வெப்பம் அடைவதில்லை. இதன் காரணமாக நாம் பாவிக்கும் மின்சார சக்தியில் 95% ற்குமேல் சமையலுக்கே பயன்படுத்தப்படுகிறன்து.

## மின்காந்த அடுப்பின் (INDUCTION COOKER) அனுகூலங்கள்

இந்த அடுப்பில் சமையல் செய்யும் போது மிக விரைவாக சமையல் செய்ய முடியும். இதன் மூலம் வேலைக்கு செல்லும் பெண்களுக்கு சமையல் செய்வதற்கான நேரம் சரி பாதியாக (50%) குறைகின்றது.

இவ் அடுப்பில் சமையல் செய்வதற்கான செலவானது மிகவும் குறைவு. சாதாரணமாக இலங்கையில் அநேகமான வீடுகளில் எரிவாயு அடுப்பே பாவிக்கப்படுகின்றது. இவ் எரிவாயு அடுப்புடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது செலவு சரி பாதியாக (50%) குறைகின்றது.

இந்த அடுப்பில் இருந்து வெப்பம் சூழலுக்கு இழக்கப்படுவதில்லை. இதனால் சமையல் செய்பவரின் உடல் வெப்பத்தினால் பாதிக்கப்படுவதில்லை. அத்துடன் குளிரூட்டப்பட்ட அறையிலும் (A/C Room) கூட இதனை பயன்படுத்தலாம். இந்த அடுப்பிலிருந்து புகை வெளிவருவதில்லை. பாத்திரத்திரங்கள் கரிப்பிடிப்பதில்லை.

இவ் அடுப்பு மிகவும் பாதுகாப்பானது. தீக் காயங்கள், மின் ஒழுக்கு என்பன ஏற்படாது. ஏனெனில் நாம் சமையல் செய்யும் போது அடுப்போ பாத்திரத்தின் மேற்பகுதியோ வெப்பமடைவதில்லை. இதனால் சிறுவர்கள் உள்ள இடத்திலும் பயன்படுத்தலாம்.

இந்த அடுப்பில் உள்ள தானியங்கி ஆளிகள் (Automatic buttons) பால்(Milk), சூப்(Soup), அரிசி(Rice), நீர்(Water) போன்றவற்றை நீங்கள் அருகில் இல்லாமலேயே சமையல் செய்து தரும்.

இது மிகவும் பாரம் குறைந்தது. இதனால் இதனை நாங்கள் செல்லும் இடங்களிற்கு இலகுவாக எடுத்துச்செல்லலாம். அத்தோடு பார்ப்பதற்கு மிகவும் அழகானது. இந்த அடுப்பை ஆன்(ON) செய்து விட்டு நாம் மறந்தாலோ அல்லது இரண்டு மணி நேரம் தொடர்ச்சியாக வேலை செய்தாலோ இது தானாகவே OFF ஆகிவிடும். இதன் காரணமாக இவ் அடுப்பு மிகவும் பாதுகாப்பானது. இந்த அடுப்பில் எமது சமையலுக்கு ஏற்றவாறு வெப்பத்தை கூட்டிக் குறைத்து பாவிக்கமுடியும்.

இந்த மின்சார அடுப்பில் இருந்து பிறப்பிக்கப்படும் மின்காந்த அலைக-ளால் உடலுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை. ஏனெனில் வீடுகளில் உள்ள மின்சார கம்பிகளின் ஊடாக மின்சாரம் பாயும் போது அதனை சூழ மின்காந்த அலைகள் உள்ளது. அது மட்டுமல்லாமல் நாம் நாளாந்தம் பாவிக்கும் மின்விசிறி, மின்மோட்டர் என்பவற்றிலும் மின்காந்த அலைகள் உண்டு.

இப்போதுதான் இலங்கை போன்ற வளர்முக நாடுகளின் மக்கள் கைக்கு எட்டும் விலைக்கு தயாரிக்கப்பட்டு இறக்குமதி செய்யப்படுகின்றது. இந்த மின்காந்த அடுப்பானது (Induction Cooker) இலங்கையிலும் பெரும் வரவேற்றை பெற்று விற்பனையாகிக் கொண்டு இருக்கின்றது. இலங்கையிலே இது பல விலைகளில் கிடைக்கப் பெறுகின்றது. **எங்களிடம் இருக்கும் மின்காந்த அடுப்பானது இலங்கை மக்களிற்காக விசேடமாக தரம் மிக்கதாக தயாரிக்கப்பட்டது**. இதன் காரணமாக இதன் விலை மற்றைய மின்காந்த அடுப்புகளை விட சற்று வித்தியாசம் ஆனது. எம்மிடமும் சாதாரணமான மின்காந்த அடுப்புக்களை பெற்றுக் கொள்ளமுடியும்.

இந்த மின்காந்த அடுப்பை இலங்கைக்கு இறக்குமதி செய்து அறிமுகப்படுத்திய ஏகவிநியோகஸ்தர்கள் என்ற பெருமைக்குரியவர்கள் AP KITCHEN LAPTOP™ நிறுவனத்தினர்.


NO.368/1, Galle Road, Wellawatte, Colombo 06.
Tel: 011 2364696, 011 2455565
Branch: No.124, Palaly Road, Jaffna.
Tel: 021 222 4749
Hotline: 0772 35 95 35
E-mail: kitchenlaptop@sltnet.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன தொழில்நுட்ப உலகிற்கு உங்களை நாங்கள் அழைக்கிறோம்

NALIN Information
Toner House

மிகப்பெரும் தொழில்நுட்ப மாற்றத்திற்குள்ளாகிவரும் இவ் உலகில் விரும்பியோ விரும்பாமலோ நீங்களும் உங்களை மாற்றிக்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளீர்கள் என்பதை நாம் இங்கு குறிப்பிட்டுத்தான் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதில்லை. ஆனால் உங்கள் மாற்றத்தை நாம் இலகுவாக்கிக்கொண்டிருக்கின்றோம் என்பதை நாங்கள் இங்கு குறிப்பிட்டு கூற விரும்புகின்றோம்.




**HOTLINE: 0777 667 974**

195/4, Parameswara Junction, Palaly Rd, Thirunelvely, Jaffna, Sri Lanka.
Tel: 0094 21 222 1166, 0777 667 974 Email: nalinprice@gmail.com

hp invent · ASUS · POWERLOGIC · Canon · LITEON · Microsoft · SONY · SONICGEAR · SAMSUNG · intel · ViewSonic

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணிதப்பிரியர்களே !.

கணிதப் பெருக்கலின் சில இலகுவான முறைகளை உதாரணங்களுடன் இங்கே தரலாம் என நினைக்கிறேன்:

நாம் 7 X 8 இன் பெறுமதியைக் காண்பதற்கு இம்முறையை முதலில் பயன்படுத்துவோம்.


பெருக்க வேண்டிய இலக்கங்கள் One Digit எனின் 10 இனை உருவாக்க எவ்வளவு குறைவாக உள்ள தெனப்பார்க்க வேண்டும். இங்கே 10-7=3 ஆகவும் 10-8=2

விடைகளான 3 இனை 8 இலிருந்தோ அல்லது 2 இனை 7 இலிருந்தோ கழித்து வரும் விடையினை(5) முன் Digit ஆகவும் 3 இனை 2 இனால் பெருக்க வரும் விடையினை 2 ஆவது Digit ஆகவும் இட வரும் 56 என்பதே (7-2=5, 3X2=6) இறுதி விடையாக இருக்கும்.

இப்போது நாம் 96 X 97 இன் பெறுமதியைக் காண்பதற்கு இம்முறையை பயன்படுத்துவோம்.

இங்கே இலக்கங்கள் 2 Digits இலக்கங்கள் என்பதால் 100 இனை உருவாக்க எவ்வளவு குறைவாக உள்ளதெனப்பார்க்க வேண்டும்.இங்கே 100-96=4 ஆகவும் 100-97=3

விடைகளான 3 இனை 96 இலிருந்தோ அல்லது 4 இனை 97 இலிருந்தோ கழித்து வரும் விடையினை(93) முன் னபைவை ஆகவும் 3 இனை 4 இனால் பெருக்க வரும் விடையினை 2 ஆவது Digit ஆகவும் இட வரும் 9312 என்பதே (96-3=93, 3X4=12) இறுதி விடையாக இருக்கும்.




உங்கள் விளம்பரங்களை அலை ஓசையில் பதிவுசெய்ய விரும்பின் பின்வரும் அளவீடுகளில் அவற்றை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| Full Page | : Rs. **,***/- |
| Half Page | : Rs. **,***/- |
| Quarter Page | : Rs. *,***/- |


குறிப்பிட்ட அளவிலான விளம்பரங்களே ஏற்றுக்கொள்ளப்படுகின்ற காரணத்தினால் பதிவுகளுக்கு முந்துங்கள்.

வரும் Aug - Sep மாதத்திற்கான விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 01.09.2011.

**ATA Aspirations(Pvt.)Ltd.**

No. 122B, Galle Road,
Dehiwala South, Colombo.
**Tel: 011 720 7989, 077 493 9756**
**Email: info@ataaspirations.com**








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்தந்தை டேமியன் அடிகளார்

## ஓர் நேர்காணல்

உளவியல் துறையில் நிபுணத்துவம் பெற்று 25 வருடங்களுக்கும் மேலாக அளப்பரிய சேவையாற்றி வரும் அருட்தந்தை டேமியன் அடிகளாரின் அனுபவப் பகிர்வுகளையும் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் தாங்கிய அவரது அஞ்சலி இல்லத்தில் பெற்றுக்கொண்ட நேர்காணல் ஒன்றினை அலைஓசை வாசகர்களுக்காகத் தருகிறோம். உளவியலின் முக்கியத்துவம் அறிந்து வாசகர்களின் வினாக்களுக்கு விடை தருவதற்கும் அருட்தந்தை அவர்கள் தமது மனப்பூர்வமான சம்மதத்தைத் தெரிவித்திருந்தார். எனவே எமது அடுத்து வரும் இதழ்களுக்கான வாசகர்களின் வினாக்கள் வரவேற்கப்படுகின்றன.



**உங்களைப்பற்றியும் உளவியல் துறையில் உங்கள் மகத்தான பணி பற்றியும் கூற முடியுமா?**

உளவியல் என்பது ஒரு பரந்த கிளை. நான் குருவாக திருநிலைப்படுத்தப்பட முன்னர் நான் ஒரு குருத்துவ மாணவனாக இருந்த போது உளவியலானது எமக்கு ஒரு பிரதான பாடமாக இருந்தது. எனக்கு இத்துறையில் அதிக ஈடுபாடு இருந்ததையும் இத்துறையிலான எனது ஆளுமையையும் அவதானித்த எமது தலைமைக்குரு என்னை Canada சென்று உளவியல்துறையில் மேற்படிப்பைப் தொடருமாறு பணித்தார். அவரது பணிப்பிற்கிணங்க Canada சென்ற எனக்கு Canada விலுள்ள இரு பல்கலைக்கழகங்கள் (University of Ottawa and University of Saint Paul) உளவியல்துறை உளவியலில் MA பட்டத்தை அளித்து கௌரவித்தன. பட்டப்படிப்பை முடித்து நாடு திரும்பிய எனக்கு குருத்துவ மாணவர்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் விசேடமாக மருத்துவ பீட மாணவர்களுக்கும் விரிவுரையாளர்களுக்கும் அதனைப் பயிற்றுவிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

முதன்முறையாக 1987 ஆம் ஆண்டு 3 வார மருத்துவபீட மாணவர்களின் பயிற்சி நெறியுடன் இப்பணி இங்கு ஆரம்பமானது. 15 வருடங்களாக யாழ்ப்பாண வைத்தியசாலையில் உளவியல்துறையில் பணியாற்றியதுடன் இதற்கான Ward ஐயும் தெல்லிப்பழையில் அமைத்துப் பணியாற்றினோம்.

1987 இலேயே இப்பணிக்கென நாம் சாந்தி அகம் என உளவளத்துணை பயிற்சி நிலையத்தை அமைத்து இலவச சேவையாற்றினோம். 1996 இல் Unicef கேட்டதற்கிணங்க சிறுவர்களுக்கென சுகவாழ்வு பயிற்சி நெறியினை நடாத்தினோம். சுனாமியின் தாக்கத்திற்கு பின்னர் 2006 இலிருந்து தும்பளையில் அஞ்சலியகத்தினூடாக தொடர்ந்து இந்த உளவியல் பணியினை செய்து வருகிறேன். இங்கு நான் 30 ஆசிரியர்களை இத்துறைக்கு பயிற்றுவித்ததோடு கணவனை பிள்ளைகளை இழந்த அன்னையர்களுக்கான Counseling இலவசக்கல்வி என்பவற்றையும் செய்து வருகிறோம்.

**இளைய சமுதாயத்திற்கு உளவியல் நோக்கில் என்ன கூற விரும்புகிறீர்கள்?**

மனம் போகும் போக்கில் போகாமல் மதிப்பிற்குரிய வாழ்வு வாழ ஆரோக்கியமான கலாச்சாரத்தைக் கைக்கொண்டு வாழ வேண்டும். பெற்றோர் தமது வீட்டில் கூட உருவாக்கும் கலாச்சார வாழ்க்கை முறை மூலமும், அத்தோடு பாடசாலைகளில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நிகழ்ச்சிகளைச் செயற்படுத்துவதன் மூலமும் திட்டவட்டமான ஒரு ஒழுக்கமுறையை நடைமுறைப்படுத்துவதன் மூலமும் இளையோரை சரியான வழியில் வழிநடத்த முடியும். எனது கருத்து ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கு புனருத்தானம் செய்ய வேண்டியது எமது கலாச்சாரத்தைத்தான்.

**பிள்ளை வளர்ப்பு பற்றி பெற்றோர்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?**

துறைசார் நிபுணர்களின் ஆலோசனையுடனான பல விழிப்புணர்வுக்கருத்தரங்குகளில் பங்குகொள்வதன் மூலம் பயன் பெறலாம்.

**'அஞ்சலி அகம்' இற்கான நிதி உதவிகள் குறிப்பாக வெளிநாட்டு நிதி உதவிகள் பற்றிக் கூற முடியுமா?**

அஞ்சலி அகத்திற்கான வெளிநாட்டு நிதி உதவிகள் பெரியளவில் இல்லை. உதவி செய்ய விரும்பும் நல்ல உள்ளங்கள் அதனை நேரடியாக அஞ்சலி அகத்துடன் தொடர்பு கொண்டு வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**எல்லோருடைய பிரச்சனைகளையும் உள்வாங்கும் உங்களால் எப்படித் தொடர்ந்து மனநிறைவோடு பணியாற்ற முடிகிறது?**

26ஆம் பக்கம் பார்க்க ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Study in UK


www.expogroup.lk



## இலவச IELTS வகுப்புக்கள்

லண்டனில் உயர்கல்வி கற்பது
தொடர்பான இலவச ஆலோசனைகளுடன்
ஒரே நாளில் அனுமதிகள் பெற்றுத்தரப்படும்.

July மற்றும் August/ September Intake ற்கான
அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுவதுடன்
பல வருடம் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின்
உதவியுடன் உங்களது விசா
தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.



- 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி
- 4 வருட Visa உத்தரவாதம்
- GCE(O/L) தகமை போதுமானது

EXPONET
Overseas Consultants

Colombo: 379-1/2, Galle Road, Colombo 06.
Tel:0117 5555 11 / 0117 5555 14 Fax: 0117 5555 17
Email: exponetpvt@yahoo.com

Branch:197 Arasady Road,Jaffna
(Between Kantharmadam Juction & Hindu Ladies College)
Tel:021 222 7230 / 021 753 8395

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியானம், யோகாசனம், சிறுவயதிலிருந்தே எனக்குப்பிடித்த இசை, எனது தனிப்பட்ட நண்பர்களுடனான கலந்துரையாடல் என்பவற்றின் மூலமே எனது மனநிலையைச் சமநிலைப்படுத்திக்கொள்கிறேன். நான் மட்டுமல்ல நீங்களும் கூட இதன் மூலம் மனநிறைவடைய முடியும்.

**உங்களிடம் வரும் மக்களின் பிரச்சனைகளை நீங்கள் 5 நிமிடத்தில் கண்டறிவதாக கூறுகிறார்கள் அப்படியா?**

இத்துறையில் 25 வருடங்கள் பணியாற்றும் எனது அனுபவத்தின் மூலமாக இதனை செய்ய முடிகிறது. பெரும்பாலும் நான் விஞ்ஞான ரீதியாகவே இப்பிரச்சனைகளைக் கையாள்கிறேன்.

**உங்களிடம் வருபவர்களுக்கு மருத்துவ சிகிச்சையா அல்லது உளவியல் சிகிச்சையா பொருத்தமானது என்பதை எப்படித் தீர்மானிப்பீர்கள்?**

அவர்களிடம் கேட்கும் வினாக்களிலிருந்து அதனைத் தீர்மானிப்பேன்.

**உளவியல் தொடர்பாக நீங்கள் ஏதேனும் நூல்களை வெளியிட்டுள்ளீர்களா?**

ஆம் உளவளத்துணை எனும் நூலை வெளியிட்டிருக்கிறேன். தொடர்ந்தும் பல நூல்களை இத்துறையில் வெளியிட விருப்பமாகத்தான் இருக்கிறேன். நேரமின்மை இதற்குத் தடையாக இருக்கிறது.

**இத்துறையில் உங்கள் வெற்றி வீதத்தைக் குறிப்பிட முடியுமா?**

85% வெற்றி பெற்றிருக்கிறேன்.

**அஞ்சலி அகத்தின் உடனடித்தேவை என்ன?**

15 இற்கு மேற்பட்ட பெற்றோரை இழந்த பிள்ளைகளை பராமரிப்பதற்கான நிதிதான் பெரிய பிரச்சனையாக உள்ளது. (நல்ல உள்ளங்களுக்கு இது சமர்ப்பணம்.தொடர்புகளுக்கு அஞ்சலி அகம் 021 321 7262)

**அலைஓசை பற்றி உங்கள் கருத்தென்ன?**

சுயநலமில்லாத சேவை. உள்நாட்டில் மட்டுமல்ல வெளிநாட்டில் உள்ள நமது உறவுகளுக்கும் தேவையான ஒரு வெளியீடு மட்டுமல்லாது எல்லோரும் படிக்கவேண்டிய ஒன்று. அலை ஓசை தொடர்ந்தும் தடைகளின்றி வெளிவர எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

காதலன்: நீ முறுக்கு சாப்பிடும் அழகை பார்கும் போது எனக்கு ஒரு கவிதை செல்ல தோன்றுகிறது.
காதலி: ம், சொல்லுக்கோ,
காதலன்: ஒரு கிறுக்கு முறுக்கு சாப்பிடுகிறது.

---

ஆசிரியர்: கிணத்துல கல்ல போட்டா அது மூழ்கிவிடும். அது ஏன்?
மாணவன்: அதுக்கு நீச்சல் தெரியாதே!



# உள நலம் சம்பந்தமான பிரச்சனைகளும் ஆலோசனைகளும்

**O/L, A/L , University இல் பரீட்சைகளில் பெறுபேறு எதிர்பார்த்தளவு கிடைக்காது மன உளைச்சலில் இருக்கும் மாணவர்களுக்கு எப்படி அவர்களது எதிர்காலத்திட்டமிடலுக்கு ஆலோசனை கூறுவீர்கள்?**

மன உளச்சலில் இருக்கும் மாணவர்களுக்கு முதலில் தேவையானது ஊக்கப்படுத்தல் (Motivation) அவர்களால் எதுவும் முடியும் என்ற மனநிலையை ஏற்படுத்த வேண்டும் இதனுடன் எல்லாம் முடிவடைந்துவிட்டது என்ற நிலை இல்லாது விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். O/L, A/L தான் வாழ்க்கை என்று இருக்காது தொடர்ந்தும் முயற்சி செய்ய வேண்டும். முதல்தர முயற்சியானது தோல்வியடைந்ததற்கான காரணத்தைக் கண்டறிந்து அதனை நிவர்த்தி செய்யும் வகையில் பயிற்சியினை மேற்கொண்டு அடுத்த தடவை அந்தப்பரீட்சையினை செய்தல், தோல்விக்கான காரணம் கண்டறிதல், திட்டமிடல், முயற்சி செய்தல் இவ்வாறு பிரச்சனைக்கான தீர்வினை மேற்கொள்ளலாம்

மனரீதியான ஆறுதலுக்கு....

பரீட்சைகளில் சித்தியடையாத பலர் சிறந்த மனிதராக நல்ல சமுதாய அந்தஸ்தில் வாழ்ந்திருக்கிறார்கள் வாழ்கிறார்கள் பரீட்சையில் சித்தியடைந்த எல்லா மாணவர்களும் நல்ல நிலையை அடைந்ததாகவும் இல்லை. மனிதன் மனிதனாக வாழ்வதுதான் சமூக அந்தஸ்து.

46 ஆம் பக்கம் பார்க்க ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழலைகளின் ஓசை



நீங்கள் 10 வயதிற்கு உட்பட்டவரா?

## ஏறுவரிசைப்படுத்தல்

உதாரணம்:
12, 7, 1, 8, 5, 10, 15, 4, 6, 20

விடை:

1, 4, 5, 6, 7, 8, 10, 12, 15, 20

நாளைய உலகின் நாயகர்களான இன்றைய மழலை மொட்டுக்களுக்கான ஒரு பகுதியை ஒதுக்கி அவர்களின் ஆக்கங்களுக்கும், திறமைகளுக்கும் வழியமைக்கும் ஒரு ஊடகமாக அலை ஓசை வெளிவருவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். பெற்றோர்களே உங்கள் செல்வங்களை "மழலைகளின் ஓசையில்" அங்கத்துவர்களாக இணைத்து அவர்களின் பக்கத்தை அவர்களின் ஆக்கங்களால் அலங்கரிக்க உங்களை அழைக்கிறோம். கீழுள்ள பகுதியை நிரப்பி புகைப்படத்துடன் எமக்கு அனுப்பி உங்கள் செல்வங்களை இலவசமாக அங்கத்துவர்கள் ஆக்குங்கள்.

### கீழ்வரும் இலக்கங்களை ஏறுவரிசைப்படுத்துக

A. 4, 20, 11, 23, 6, 2, 31, 10, 7, 1

B. 14, 9, 3, 23, 19, 10, 7, 6, 13, 20

C. 12, 5, 30, 18, 11, 25, 22, 4, 8, 10

D. 50, 22, 32, 3, 12, 40, 39, 5, 6, 11

E. 30, 28, 40, 41, 25, 16, 45, 10, 15, 1

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

பெயர் : ..............................................................

வயது : ..............................................................

முகவரி : ..............................................................

..............................................................

தொலைபேசி இல. : ..............................................................

பாடசாலை : ..............................................................

நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி

**ATA Aspirations (Pvt.) Ltd.**

No: 122B, Galle Road,
Dehiwala South, Colombo.


Call Monday - Friday
from 10.00 am - 5.00 pm.

Tel: 011 272 2990, 011 720 7989



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழலைகளின் ஆக்கம் 03



கவிஷா கதிர்காமத்தம்பி



Sanjeev Nalin

## இந்தமாதம் அங்கத்துவர்களாக இணைத்துக்கொள்ளப்படும் அதிஷ்டசாலிக் குழந்தைகள்

சந்திரசேகர் கேஷவி
வயது 6
இல. 94, சிலாப வீதி, கொச்சிகடை,
நீர்கொழும்பு.

கவியாழன்
வயது 9
43, பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்.

N. Rohithan
5 Years
No. 150/2B, Sea Street,
Negombo.

## சென்ற இதழின் நிறம்திட்டுதல் போட்டியில் தேர்வுசெய்யப்பட்டவர்கள்

குகநேசன் கோவர்த்தனன், வயது 2, யாழ்ப்பாணம்.
ஜெயராசா யசிந்தன், வயது 12, மானிப்பாய்.
S. Nalin, 7 Years, Jaffna.
சி. கவியாழன், வயது 9, யாழ்ப்பாணம்.
N. Rohithan, 5 Years, Negombo.
பா. அபிநயா, வயது 5, யாழ்ப்பாணம்.
நி. பிரியங்கா, வயது 12, காரைநகர்.
இனியா கிருஷ்ணகுமார், வயது 2, உடுப்பிட்டி.
M. சந்திரசேகர் கேஷவி, வயது 6, நீர்கொழும்பு.
Rebecca Jennifer Joseph, 5 Years, Colombo 05.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓசையின் கவிதை அரங்கம்

## பேனாமையில் நனைகிறது

அலை ஓசை வாசல் வரை ஒலிக்கிறது
விளம்பரமாய் சொல்லிவிட மனம் துடிக்கிறது
வண்ண வண்ணக் கனவுகள்- கலர் கலராய்
மௌனம் கலையாதபடி மகிழ்வுக்குள்!

எண்ணம் ஒன்று இருவிழி, பார்வை ஒன்று
பகுத்து அறிந்தால் இரு ஒரு விதி!
கவிதை என்பது புரியும் படி கனதியில்லாமல்
கருவுக்குள் அலை ஓசை லயிக்கிறது!

பெருகியது தொழில் நுட்பம், குவிந்து விட்ட
அறிவியலைத் தேடி யெடுக்க நேரமில்லை
பொதிந்துவிட்ட அலை ஓசை, கைகளில்
கண்டு களிக்க இலகுவில், இன்பத்தமிழில்!

தணியாத தாகம், கதிரவன் கதிர்கள்
அள்ளிய நீர் துளிகள் அகில மெங்கும்
அலை ஓசை சுவைக்கிறது இனிக்கிறது
இனியொரு விதி செய்ய அழைக்கிறது!

எதிர்பார்புக்களுடன், வளர்ச்சியில் இணைய
வாசகர்களை ஊக்குவிக்க, எனது
பேனா மையில் நனைகிறது, இனிய
செய்திகளைச் சுமந்து என் ஆக்கத்துடன்

இ. ஜெயபாலன்
தொட்டிலடி, சங்கானை.

---

உன் ஓரே மௌனத்தினால்
நான் ஆயிரம் அர்த்தங்களை உணர்ந்தேன்
என் ஆயிரம் வார்த்தைகளில் ஒன்றைக்கூட
உன்னால் உணர முடியவில்லையே!

சேர்வோம் என்ற நம்பிக்கையில் பிரிந்தோம்
அன்று

ஆனால் இன்று - அன்று பேசாத நான்
இன்னும் பேசாமல் இருப்பதும் அதே நினைவுகளோடு
உன் நினைவுகளோடு இருந்த நிமிடங்களை

கடிகாரம் திரும்ப திரும்ப காட்டுகையில்
மறக்கமுடியவில்லை உன்னையும் - நீ
விட்டுச் சென்ற காதலையும்.

என்றும் R. Anush

---

மதுவே உன்னை
நினைக்க விரும்புகிறேன்
மனைவி விடவில்லை
உன்னை மறக்க விரும்புகிறேன்
அதுவும் முடியவில்லை
என்னிடம் இருப்பதோ ஒரு ஈரல்
அதுவும் கருகிவிட்டதே
நான் என்ன செய்வேன்

---

உனக்காக என் கவிதைப் புத்தகத்தில்
பக்கங்கள் திருப்பிக்கொண்டிருக்கிறேன்
ஆனால் என்னவளே!
உன்னைப்போல் ஒய்யாரக் கவிதை
ஒன்றுமில்லையடி.

R. Aynkaran

---

உங்கள் கவிதைகள்
அனுப்பவேண்டிய முகவரி
ஓசையின் கவிதை அரங்கம்

**ATA Aspirations (Pvt.) Ltd.**

No. 122/B, Galle Road, Dehiwala South,
Colombo, Sri Lanka.
Tel: 011 720 7989, 011 272 2990
M: 077 4939756
Email: info@ataaspirations.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Main road இல் இருந்து side road இல் நுழையும் போது ஏதேனும் வாகனங்கள அதே Side Road இலிருந்து Main Road இற்கு வரக்காத்திருக்கிறது எனின் அந்த வாகனத்தின் position உங்களது வாகனத்தின் திரும்புகைக்கு போதுமானதா (See Image 2) என்று உறுதி செய்ய வேண்டும் மிக முக்கியமானவர்கள் பாதசாரிகள் (See Image 2.1), சைக்கிளோட்டிகள், மோட்டர் வண்டி ஓட்டுனர்கள் (See Image 2.2) இவர்கள் தான் ஆபத்தான விபத்திற்கு காரணமாக இருக்கும் Road Users.

தெருவில் கடக்க முயற்சிக்கும் பாதசாரிகள் சைக்கிளோட்டிகள் எமது பார்வைக்குள் வர மாட்டார்கள். இடது, வலது Interior Mirror (காரின் உள்ளிருக்கும் Mirror) இவ்வாறு எல்லா பகுதி Mirror மூலமும் எமது View இனை





Image 2



Give way to pedestrians who have started to Cross

Image 2.1



Do not cut in on cyclists

Image 2.2

உறுதி செய்ய வேண்டும். இதன் பின் திரும்பலாம். Mirror Checking, Signal, Correct Speed, Turning. சந்திகளை அண்மித்ததும் Road மூன்றாக பிரிவது (see images 3,3.1)

ஆயின் உங்களது பிரயாணத் திட்டத்தின் படி மற்றைய வாகன சாரதிகளிற்கு இடையூறாகவோ அல்லது அவர்களது கவனத்தினை சிதைக்காது அவர்களிற்கு நேரத்தினைக் கொடுத்து உங்களது Lane இனை தெரிவு செய்ய




Image 3



Image 3.1

வேண்டும். கடைசி நேரத்தில் Signal இன்றி உங்களது தெரிவினை மேற்கொள்ளும் போது அது விபத்துக்கு வழி வகுக்கலாம் Lane இனை தெரிவு செய்ய தவறின் அதே Lane இல் சென்று திரும்பி வருவது நல்லது Last Minute Turning இனால் விபத்துக்குள்ளாகி அது Time Delay, செலவினை விட அதே Lane இல் சென்று திரும்பி வருவது நல்லது.

Main வீதிகளில் செல்லும்போது இடது புறமாகவோ வலது புறமாகவோ (Left or Right Turn) நீங்கள் காத்திருக்கும் போது பிற வாகன சாரதிக்கு இடம் விட்டு (See Image 4.1) உங்களது position ஐ தெரிவு செய்ய வேண்டும். main road இல் Right Turn இற்கு காத்திருக்கும் போது உங்களது வாகனத்தின் இடது புறமாக மற்றைய வாகனங்களிற்கு இடம் விட்டுதிரும்புவதற்காக Signal இனைப் போட்டு Oncoming Traffic இனைப் பார்த்துக் காத்திருக்க வேண்டும். (See Image 4) One Way Side Road இலிருந்து Main Road இன் வலதுபுறம் நீங்கள் திரும்ப் வேண்டுமாயின் உங்களது Position அந்த One Way Road இல் Entirely வலது புறம் அமைக்க வேண்டும் ஏனெனில் நீங்கள் நிற்பது One Way Road. அதில் Main road இலிருந்து வாகனங்கள் Enter



Position your vehicle correctly to avoid obstructing traffic

Image 4




Image 4.1

பண்ண மாட்டாது. இதே Side Road சாதாரணமாக விதியாயின் நீங்கள் வலது புறம் திரும்புவதற்கு அந்த Side Road இல் சரி நடுவில் Dot Dot Line இருக்குமாயின் அதன் மேல் உங்கள் காரின் வலது Front Back Tyre நிற்குமாறு Position இருக்க வேண்டும். Dot Dot Line இல்லையாயின் உங்களது அளவுத்திட்டத்தின் படி Position இருக்கவேண்டும் Main Road இலிருந்து Side Road இல் Enter பண்ணும் வாகனத்திற்கு இடத்தினை விட்டு நடுவில் Signl ஐ போட்டு காத்திருக்கலாம். Side Road இருந்து Main Road இன் இடது புறம் திரும்பும் வாகனத்திற்கும் இடத்தினை விட்டு இடதுபுறம் திரும்புவது சாதாரண Position.

தொடரும் ....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*It's Very difficult to find Top-Class*

**Hotel in Jaffna**

*We will guide you*

Contact: 021 222 3966



www.anishhotel.com

**The Place to enjoy**

## Hotel Lux Etoiles


No: 34, Chetty Street Lane, Nallur,
Jaffna, Sri Lanka.
Tel: 021 222 3966
Fax: 021 222 0606

## Hotel Anish Park

No: 109, Upper Lake Road, Nasby House,
Nuwara Eliya, Sri Lanka.
Tel: 052 222 3966
Fax: 052 222 3033

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரடைப்பு
## (Heart Attack)



மாரடைப்பா?. இல்லையா என்பதை ஐந்தே நிமிடத்தில் கண்டு பிடித்து விடலாம். இதனை உடனடியாக கவனிக்காவிட்டால் இதயத்தின் திசுக்களை செயலிழக்கச் செய்து இதயத்தின் பம்ப் செய்யும் செயற்பாடு பாதிக்கப்பட்டு மார்பு வலி, மூச்சிரைப்பு, படபடப்பு, மயக்கம் என்று அடுத்தடுத்து தொடர்ந்து, கடைசியில் திடீர் மரணம் சம்பவித்து விடும். உலக இதயக்குழு, ஐரோப்பிய இதயக்கழகம், அமெரிக்க இதயக் கழகம், அமெரிக்க இதய சங்கம் இந்த நான்கும் சேர்ந்து, உலக ஆய்வு கூட்டமைப்பு அமைத்து மாரடைப்பின் வகைகளை வகுத்துள்ளன. மாரடைப்புகள் மொத்தம் ஆறு வகையாக பிரிக்கப்பட்டுள்ளது இவற்றில் ஐந்து, ஆறாவது வகை மாரடைப்புகளுக்கு காரணம், ஸ்டென்ட்டையும், பைபாஸ் கிரங்குகளையும் சரியாகப் பாதுகாக்காததால் தான். பெரும்பாலான மருத்துவர்கள் நோயாளிகளிடம் பேசும் நேரம் குறைவு. அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகளில் மருத்துவர், நோயாளி இவர்களின் ஆலோசனை பல மணிநேரமாகிறது. இதனால் நோயாளிகள் எது எப்போது என்ன செய்ய வேண்டும் என்பதைத் துல்லியமாகத் தெரிந்து கொள்கின்றனர்.

### முதல்வகை மாரடைப்பு

இந்த வகை மாரடைப்பு இரத்த நாளத்தில் கெட்டக் கொழுப்பினால் அடைப்பு ஏற்பட்டு இறுதிக்கட்டத்தில் இரத்தம் உறைந்து முழு அடைப்பு ஏற்படுவது. இதனால் ஈ.சி.ஜி யில் மாற்றம் ஏற்படுகிறது இதனை ஸ்டெமி மாரடைப்பு என்று அழைக்கின்றனர். இதனை உறுதி செய்ய டிரோப்டி டெஸ்ட் செய்ய வேண்டும் அருகில் உள்ள வைத்தியசாலையில் 2 மணி நேரத்தினுள் ஆஞ்சியோகிராம், பிளாஸ்டி ஸ்டென்ட், பைபாஸ் செய்ய வேண்டும். மாரடைப்புக்குக் காரணமான இரத்தக்கட்டியை கரைக்க பல்வேறு ஊசிகளை போடுவதுண்டு கட்டியைக் கரைத்தவுடன் மீதியுள்ள அடைப்பை பலூன் ஸ்டென்ட் வைத்துக் குணப்படுத்த வேண்டும்.

முதல் 2 மணி நேரம் கோல் டன் கவர் என்று அழைக்கப்படுகிறது கரோனரி இரத்தக்குழாயில் முழு அடைப்புக்கு காரணமான இரத்தக்கட்டியை 2 மணி நேரத்தில் கரைக்கவேண்டும். இல்லையேல் அந்த இரத்த நாளம் ரத்தம் செலுத்தும் இதயத்தசைகள் அழிந்து (நெக்ரோசில்) இதயத்தின் இரத்தத்தை செலுத்தும் திறன் இஜச்சன் பிராக்ஸன் (இ.எப்) குறைந்து மூச்சுத் திணறல் படபடப்பு இரத்த அழுத்தம் குறைதல் பலவித சிக்கலை ஏற்படுத்தி மரணத்தை ஏற்படுத்தும். அதனால் தான் நேரம் விரயமாகாமல் 2 மணி நேரத்தில் சிகிச்சையைத் தொடங்கி இதயத்தை காப்பாற்ற வேண்டும். இதனை முதன்மை பலூன் சிகிச்சை என்று கூறுகிறோம்.



### இரண்டாவது வகை மாரடைப்பு

இந்த வகைக்கு காரணம் வேறு விதமானது. இதயத்தசைகளுக்கு பிராண வாயு தேவை அதற்கு ஈடு கொடுத்து சமமாக பிராண வாயுவைக் கொடுக்க வேண்டிய சமநிலையில் வேறுபட்டால் குறை ஏற்பட்டு முழு அளவு தடைப்பட்டால் மாரடைப்பு மரணம் ஏற்படும். இரத்தம் தடைப்பட்டால் இரத்தம் உறைந்து விடும் இந்த வகை மாரடைப்பு மரணம் இளம் வயதினருக்கும் வரும் ஆஞ்சியோ கிராம் செய்து பார்த்தால் கரோனரி ரத்தக்குழாய்கள் அடைப்பு இன்றி இருக்கும் நடுத்தர இளம் பெண்களுக்கு சாதாரணமாக வரும். ரத்த நாளச்சுருக்கம் கண்ணுக்குத் தெரியாத மைக்கிரஸ் கோப் இதயத்தினுள் இருக்கும் நாளங்களில் சுருக்கம் அடைப்பும் இஸ்மியாவும் அர்த்திமியாவும் தான் காரணம்.

### மூன்றாவது வகை மாரடைப்பு

நீண்ட நேரம் இரத்த நாளம் சுருங்கினால் இரத்தம் உறைந்து அடைப்பு ஏற்பட்டு அதன் மூலம் மாரடைப்பு உண்டாவது தான் இந்த வகை.

### நான்காவது வகை மாரடைப்பு

மாரடைப்பு வந்த பின் பலூன் ஸ்டென்ட் சிகிச்சை செய்யும் போது ஸ்டென்டில் இரத்தம் உறைந்து அடைப்பு ஏற்படும் இது இன்ஸ்டென்ட் அடைப்பு எனப்படும். அதனால் வரும் மாரடைப்பு மூலம் விளைவுகளை ஏற்படுத்தும் நல்ல மருந்துகளால் இதை உடனடியாக தடுத்து விடலாம்.


### ஐந்தாவது வகை மாரடைப்பு


ஸ்டென்ட் சிகிச்சைக்கு பிறகு அந்த ஸ்டென்ட் என்ன வகை எப்படிப்பட்டது போன்ற முக்கிய குறிப்புகளை நன்கு தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும். அப்படித் தெரிந்து கொண்டு கண்ணும் கருத்துமாக பாதுகாத்து வர வேண்டும். அதாவது ஸ்டென்ட் வைத்த டாக்டர் அல்லது ஸ்டென்டைப் பற்றி நல்ல தெளிவாகவும் தெரிந்த நிபுணரிடம் ஆலோசனை பெற்று ஸ்டென்டின் இன்றைய நிலை அதில் கொழுப்பு படிந்துள்ளது என்ற விபரங்களை அறிந்து கொள்ள வேண்டும்.


46 ஆம் பக்கம் பார்க்க ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தமிழ்ச் சங்க நூலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னியின் செல்வன்

இப்போதுள்ள பழுவேட்டரையர் இருவரில் மூத்தவர் இருபத்து நான்கு போர்களில் ஈடுபட்டவர். அவருடைய காலத்தில் அவருக்கு இணையான வீரர் சோழ நாட்டில் யாருமில்லையென்று புகழ்பெற்றவர். இப்போது பிராயம் ஐம்பதுக்கு மேல் ஆகியவிட்டபடியால் அவர் போர்க்களங்களுக்கு நேரில் செல்வதில்லை. ஆனால் சோழ நாட்டு அரசாங்கத்தில் மிக உன்னதமான பல பதவிகளை வகித்து வந்தார். அவர் சோழ சாம்ராஜ்யத்தின் தனாதிகாரி: தன்யாதிகாரி: தனபண்டாரமும் தான்ய பண்டாரமும் அவருடைய அதிகாரத்தில் இருந்தன. அரசியலில் தேவைக்குத் தகுந்தபடி இறை விதித்து வசூலிக்கும் அதிகாரம் அவரிடம் இருந்தது. எந்தச் சிற்றரசரையும், கோட்டத் தலைவரையும், பெரிய குடித்தனக் காரரையும், "இவ்வாண்டு இவ்வளவு இறை தர வேண்டும்?" என்று கட்டளையிட்டு வசூலிக்கும் உரிமை அவருக்கு இருந்தது. ஆகவே, சுந்தர சோழ மகாராஜாவுக்கு அடுத்தபடியாகச் சோழ சாம்ராஜ்யத்தில் இப்போது வலிமை மிக்கவர் பழுவேட்டரையர் தான்.

அத்தகைய மகா வீரரும் அளவிலா வலிமையும் அதிகாரமும் படைத்தவருமான, பெரிய பழுவேட்டரையரைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் வந்தியத்தேவனுடைய உள்ளத்தில் பொங்கியது. ஆனால் அதே சமயத்தில், காஞ்சி நகரின் புதிய பொன் மாளிகையில் இளவரசர் ஆதித்த கரிகாலர் தன்னிடம் அந்தரங்கமாகச் சொன்ன செய்தி அவனுக்கு நினைவு வந்தது.

வந்தியத்தேவா! நீ சுத்த வீரன் என்பதை நன்கு அறிவேன். அத்துடன் நீ நல்ல அறிவாளி என்று நம்பி இந்த மாபெரும் பொறுப்பை உன்னிடம் ஒப்புவிக்கிறேன்.



நான் கொடுத்த இரு ஓலைகளில் ஒன்றை என் தந்தை மகாராஜாவிடமும் இன்னொன்றை என் சகோதரி இளையபிராட்டியிடமும் ஒப்புவிக்க வேண்டும். தஞ்சையில் இராஜ்யத்தின் பெரிய பெரிய அதிகாரிகளைப் பற்றிக் கூட ஏதேதோ கேள்விப்படுகிறேன். ஆகையால் நான் அனுப்பும் செய்தி யாருக்கும் தெரியக் கூடாது. எவ்வளவு முக்கியமானவராயிருந்தாலும் நீ என்னிடமிருந்து ஓலை கொண்டு போவது தெரியக்கூடாது. வழியில் யாருடனும் சண்டை பிடிக்க கூடாது. நீயாக வலுச் சண்டைக்குப் போகாமலிருந்தால் மட்டும் போதாது. மற்றவர்கள் வலுச் சண்டைக்கு இழுத்தாலும் நீ அகப்பட்டுக் கொள்ளக் கூடாது. உன்னுடைய வீரத்தை நான் நன்கறிவேன். எத்தனையோ கடவை நிருபித்திருக்கிறாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகையால் வலிய வரும் சண்டையிலுருந்து விலகிக் கொண்டாலும் கௌரவக் குறைவு ஒன்றும் உனக்கு ஏற்பட்டு விடாது. முக்கியமாக, பழுவேட்டரையர்களிடமும் என் சிறிய தந்தை மதுராந்தகரிடமும் நீ மிக்க ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு நீ இன்னான் என்று கூடத் தெரியக் கூடாது! நீ எதற்காகப் போகிறாய் என்று அவர்களுக்குக் கண்டிப்பாய்த் தெரியக் கூடாது!"

சோழ சாம்ராஜ்யத்தின் பட்டத்துக்குரிய இளவரசரும் வடதிசைச் சைன்யத்தின் மகாதண்ட நாயகருமான ஆதித்த கரிகாலர் இவ்விதம் சொல்லியிருந்தார். மேலும் வந்தியத்தேவன் நடந்து கொள்ள வேண்டியவிதங்களைப் பற்றியும் படித்துப் படித்தக் கூறியிருந்தார். இவையெல்லாம் நினைவு வரவே, பழுவேட்டரையரைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலை வல்லவரையன் அடக்கிக் கொண்டான். குதிரையைத் தட்டிவிட்டு வேகமாகச் செல்ல முயன்றான். என்ன தட்டி விட்டாலும் களைப்புற்றிருந்த அந்தக் குதிரை மெதுவாகவே சென்றது. இன்று இரவு கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் தங்கிவிட்டு நாளைக் காலையில் புறப்படும்போது வேறு நல்ல குதிரை சம்பாதித்துக் கொண்டே கிளம்ப வேண்டும் என்று மனதிற்குள் தீர்மானித்துக் கொண்டான்.

## இரண்டாம் அத்தியாயம்

## ஆழ்வார்க்கடியான் நம்பி

ஏரிக் கரையிலிருந்து கீழிறங்கித் தென்திசை சென்ற பாதையில் குதிரையைச் செலுத்தியபோது வந்தியத்தேவனுடைய உள்ளம் ஏரி அலைகளின் மீது நடனமாடிய படகைப் போல் ஆனந்தக் கூத்தாடியது. உள்ளத்தின் உள்ளே மறைந்து கிடந்த குதூகலம் பொங்கி ததும்பியது. வாழ்கையின் வேறு யாரும் காணாத அதிசய அனுபவங்களைத் தான் அடையும் காலம் நெருங்கி விட்டதென்று அவனுடைய உள்ளுணர்ச்சி சொல்லியது. சோழ நாட்டை அணுகும்போதே இவ்வளவு ஆனந்தக் கோலாகலமாயிருக்கிறதே? கொள்ளிடத்தைத் தாண்டி விட்ட பின்னர் அச்சோழ நாட்டின் நீர்வளமும் நிலவளமும் எப்படியிருக்கும்? அந்நாட்டில் வாழும் மக்களும் மங்கையரும் எப்படியிருப்பார்கள்? எத்தனை நதிகள், எத்தனை குளங்கள்? எத்தனை தெளிநீர் ஓடைகள்? கவிகளிலும் காவியங்களிலும் பாடப்பெற்ற பொன்னி நதியின் காட்சி எப்படியிருக்கும் அதன் கரைகளிலே பூத்துக் குலுங்கும் புன்னை மரங்களும் கொன்னை மரங்களும் கடம்ப மரங்களும் எத்தகைய மனோகரமான காட்சியாயிருக்கும்? நீரோடைகளில் குவளைகளும் குமுதங்களும் கண்காட்டி அழைப்பதும் செந்தாமரைகள் முகமலர்ந்து வரவேற்பதும் எத்தகைய இனிய காட்சியாயிருக்கும்? காவேரியின் இரு கரைகளிலும் சிவபக்திச் செல்வர்களான சோழப் பரம்பரையினர் எடுப்பித்துள்ள அற்புத வேலைப்பாடமைந்த ஆலயங்கள் எவ்வளவு அழகாயிருக்கும்?

ஆகா! பழையாறை நகர்! சோழ மன்னர்களின் தலைநகர்! பூம்புகாரையும் உறையூரையும் சிறிய குக்கிராமங்களாகச் செய்துவிட்ட பழையாறை! அந்நகரிலுள்ள மாடமாளிகைகளும் கூட கோபுரங்களும் படை வீடுகளும் கடைவீதிகளும் சிவாலயக் கற்றளிகளும் திருமாலுக்குரிய விண்ணகரங்களும் எப்படியிருக்கும்? அந்த ஆலயங்களில் இசை வல்லர்கள் இனிய குரலில் தேவாரப் பாடல்களையும் திருவாய்மொழிப் பாசுரங்களையும் பாடக்கேட்டோர் பரவசமடைவார்கள் என்று வந்தியத்தேவன் கேள்வியுற்றிருந்தான். அவற்றையெல்லாம் கேட்கும் பேறு தனக்கு விரைவில் கிடைக்கப் போகிறது இது மட்டுந்தானா? சில நாளைக்கு முன்பு விரைவில் தான் கனவிலும் கருதாத சில பேறுகளும் கிட்டப்போகின்றன. வீரத்தில் வேலனையும் அழகில் மன்மதனையும் நிகர்த்த பராந்தக சுந்தர சோழ மகாராஜாவை நேருக்கு நேர் காணப்போகிறான். அவ்வளவுதானா? அவருடைய செல்வப் புதல்வி, ஒப்புயர்வில்லாத நாரீமணி, குந்தவைப் பிராட்டியையும் காணப்போகிறான்.

ஆனால் வழியில் தடை எதுவும் நேராமல் இருக்க வேண்டும். எந்தத் தடை நேர்ந்தால்தான் என்ன? கையிலே வேல் இருக்கிறது. இடையில் தொங்கிய உறையிலே வாள் இருக்கிறது, மார்பிலே கவசம் இருக்கிறது, நெஞ்சிலே உரமிருக்கிறது. ஆனால் மகாதண்ட நாயகர், இளவரசர் ஆதித்தர், ஒரு பெரிய முட்டுக்கட்டை போட்டிருக்கிறார், ஒப்புவித்த காரியத்தை நிறைவேற்றுவதற்கு முன்பு யாரிடமும் சண்டை பிடிக்கக் கூடாதென்று. அந்தக் கட்டளையை நிறைவேற்றுவதுதான் மிகவும் கடினமாயிருந்தது.

தொடரும் ....




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலக்கல் ஓசை



## எங்கட பொடியளுக்கு ஒரு பொன்னான அட்வைஸ்

வழங்குபவர் மிஸ்டர். லாடு லபக்கு தாஸ்

## வேலை! வேலை! வேலை!

எந்தப் பன்னியாவது எனக்கொரு வேலை தரமாட்டானா! சரி வேலை தாறன் என்றவன் நேர்காணல் என்பான் பிறகு அனுபவம் எங்கே எண்டு கேட்பான். ஒரு நாயும் வேலை தராம அனுபவம் எப்படி வரும். அதுதான் எங்கட பெடியளுக்குச் சொல்றேன் எப்படி நேர்காணலில் உண்மையைச் சொல்ல வேண்டுமென்று. மனதுக்க ஒண்டை வச்சு வெளியில ஒண்டு கதைக்காம உள்ளதை உள்ளபடி சொல்லுங்கோ அப்பத்தான் வேலையும் கிடைக்கும் போனசும் கிடைக்கும்.

**நீங்கள் ஏன் எங்கள் நிறுவனத்தில் பணிபுரியவிரும்புகிறீர்கள்?**

எந்தப் புண்ணாக்குக் கம்பெனியிலாவது வேலை செஞ்சாதான் பொழப்ப ஓட்ட முடியும். எந்த நாய் வேலை குடுக்குதோ அங்க வேலை செய்ய வேண்டியதுதான். அதைத் தவிர உன் கம்பேனி மேல பெருசா ஒண்ணும் மதிப்பு மரியதையெல்லாம் இல்லே....!

**உங்களுக்கு ஏன் இந்த வேலையைத் தரவேண்டும்..?**

உன் கம்பெனி வேலையை யாராவர் ஒருத்தன் செஞ்சுதானே ஆகணும். என்கிட்டதான் கொடுத்துப் பாரேன்.

**உங்களுடைய தனித்திறமை என்ன..?**

வேலைக்கு சேர்ந்ததும், கடலை போட வழியிருக்கான்னு பார்ப்பேன். இங்கேருந்து என்னென்ன சுடலாம்ன்னு நோட்டம் உடுவேன். உன் கம்பெனியில் வேலைக்கு சேர்ந்ததைச் சொல்லி ஊர் பூரா கடன் வாங்குவேன் அப்புறம் வேற கம்பெனிக்கு தாவ முயற்சி பண்ணுவேன். இதைத் தவிர உன் கம்பெனிக்கு சேவை செஞ்சு முன்னுக்குக் கொண்டு வரணும்ங்கிற மூட நம்பிக்கையெல்லாம் கிடையாது.

**உங்கள் மிகப்பெரிய பலம்....?**

இதைவிட பெரிய சம்பளத்தில் வேலை கடைச்சா அப்படியே உட்டுட்டு அங்கே ஓடிருவேன். மனசாட்சி, நன்றியுணர்வு இதுக்கெல்லாம் முட்டாள்தனமா இடமே கொடுக்காம கடுமையா நடந்துக்குவேன்.

**பலவீனம்?**

ஹி.. ஹி.. பெண்கள்..!

**இதற்கு முன் வேலை பார்த்த நிறுவனத்தில் உங்கள் சாதனைகள் என்ன?**

அப்படி ஏதும் இருந்தா நான் ஏன் வேலை தேடி இங்கே வருகிறேன். அந்த சாதனைகளை பெருசா பில்டப் பண்ணி அங்கேயே வேணும்ங்கிற அளவுக்கு சம்பளத்தைக் கறந்துருக்க மாட்டேனா..?

**நீங்கள் சந்தித்த மிகப்பெரும் சவால் என்ன? அதை எப்படி வெற்றி கொண்டீர்கள்..?**

ஆண்டவன் அருள்தான் காரணம்.. இதுவரைக்கும் எந்த நிருவாகியும் மூணாவது மாசச் சம்பளத்தைக் கொடுக்கறதுக்கு முன்னே நான் ஒரு வெத்துவேட்டுன்னு கண்டுபிடிச்சதே இல்லே.

**ஏன் இதற்கு முன் பார்த்த வேலையை விட்டு விட்டீர்கள்..?**

நீங்கள் ஏன் இந்த வேலைக்கு நேர்காணல் நடத்த வேண்டிய அவசியம் வந்ததோ அதே காரணத்துக்காகத்தான்...!


**இந்த பதவியில் நீங்கள் எதிர்பார்க்கும் அம்சங்கள் என்ன..?**

நல்ல சம்பளம், 0 % வேலை, பக்கத்து சீட்டுல கண்ணுக்கு குளிர்ச்சியா ஒரு பெண், நாட்டாமை பண்ண எனக்குக் கீழே ஒரு கூட்டம் அது போதும்.

நான் நினைக்கிறேன் இப்ப உங்களுக்கு தனி தில் ஒண்டு வந்திருக்குமே. நேர்காணலுக்கு அப்பொயின்மென்ற் எடுத்துக் காத்துக் கொண்டிருக்கிற பெடியளுக்கு வாழ்த்துக்கள். நிச்சயம் உங்களுக்கு வேலை கிடைக்குதோ இல்லையோ ஏதாவதொன்று கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள நலம் சம்பந்தமான பிரச்சனைகளும் .....

**எதிர்பார்த்த வேலை கிடைக்காத ஒருவருக்கு தனக்கு கிடைத்த வேலையைத் திறம்படச் செய்வதற்கான உங்கள் ஆலோசனை என்ன?**

தமிழ் சமூகத்தில் சில வேலையைத்தான் பெரியதாக நினைக்கும் மனநிலையுள்ளது. உண்மையில் அந்த நிலையில் சமூக விழிப்புணர்வு (Social Awareness) ஏற்படுத்தப்பட வேண்டும். சமூகத்தில் உயர்வான வேலை தான் வேலை இதனைத்தவிர வேறு எதுவும் இல்லை என்ற நிலை மாறவேண்டும் ஒருவர் முதலில் தனது இயலுமை ஆற்றல் தரம் (Capacity) ஏற்றபடி நினைக்க வேண்டும். இதற்கு ஒருவர் முதலிலேயே Career counseling செய்து அதன்படி தனது பாடத்தெரிவினை செய்து அந்த Track இல் சென்று உயர்நிலையடைய வேண்டும்.

**வேலை செய்யும் பெண்கள் வீட்டில் முக்கியமாக பிள்ளைகளின் வளர்ச்சியில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதில் உங்கள் ஆலோசனை என்ன?**

இன்றைய காலகட்டத்தில் குடும்பக்கட்டமைப்பு மாற்றமடைந்துள்ளது. குடும்பத்தின் பொருளாதார நிலை பெண்களின் கல்வி அறிவு வேலை செய்யும் ஆற்றல் என்பவற்றினால் இன்று கணவன் மனைவி இருவரும் வேலை செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகிறவர்கள் பிள்ளைகளே. வேலை செய்யும் பெண்களின் பிள்ளைகள் தாய் தந்தையின் அன்பிற்காக ஏங்குகின்றனர். இந்த நிலையில் வேலைக்கு செல்லும் தாய் எவ்வாறு பிள்ளையின் உணவு அன்பு தனிமை பிரிந்திருத்தலை எவ்வாறு கையாள்கின்றார். Integral Education என்பது ஒரு குழந்தையை உணர்வு ரீதியாக மன ரீதியாக ஆத்ம ரீதியாக வளர்க்க வேண்டும் என்பது தான். குழந்தை Complex உடன் வளரக்கூடாது. தாழ்வு மனப்பார்வையை ஏற்படுத்தக்கூடாது. சுய மதிப்புடன் வளர வேண்டும். இன்றைய பெற்றோர் வேலை அவசரத்தில் பிள்ளைகள் பாட்டன் பாட்டிகளுடன் வளரும் நிலையில் அவர்கள் உணவுத்தேவை பூர்த்தியாக்கப்படுகிறது. ஆனால் தாயன்பு கேள்விக்குறியாகிறது.


IMMEDIATE
VACANCY
GRAPHIC DESIGNER
one year experience in
Adobe Illustrator, Adobe Photoshop, CorelDRAW
CONTACT: 011 720 7989
Email: info@ataaspirations.com


## மாரடைப்பு ....

ஸ்டென்ட் மூடி மாரடைப்பு வராமல் தடுக்க தகுந்த நிபுணரின் கண்காணிப்பில் பரிசோதனைகள் செய்து காத்துக் கொள்ள வேண்டும். ஸ்டென்ட் சிகிச்சை செய்து 20 ஆண்டுகள் மருத்துவம் பார்த்து நலமாக உள்ளவரும் உண்டு. 2 ஆண்டுகளில் ஸ்டென்ட் மூடி மாரடைப்புடன் வந்தவரும் உண்டு. முதலாமவர் நல்ல வாழ்க்கை முறையைக் கடைப்பிடிப்பவர் இரண்டாமவர் தான் தோன்றிய முறையில் வாழ்பவர் ஸ்டென்ட் முழுவதும் மூடினால் மாரடைப்பு மூச்சிரைப்பு படபடப்பு இனம் தெரியாத அசதி இது வராமல் தடுக்க பல கட்டங்களில் பரிசோதனைகள் செய்து கொள்ள வேண்டும்.

### ஆறாவது வகை மாரடைப்பு

மாரடைப்புக்கு பின் பைபாஸ் செய்தவர்களுக்கு வரும் மாரடைப்பு இதுவாகும். இங்கு பைபாஸ் செய்த பல கிராப்டுகளில் அடைப்பு ஏற்பட்டு மாரடைப்பு ஏற்படும். பைபாஸ் செய்தவர்கள் நமக்கு பைபாஸ் கிராப்டுகள் வைக்கப்பட்டுள்ளது. இது இரத்த நாளம் போன்ற இரத்த ஓட்டமில்லை.கிராப்ட் வெறும் இணைப்புதான். ஆகையால் இதனை அதி கவனமாகப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். எத்தனை கிராப்ட்கள் எந்தெந்த இடங்களில் உள்ளது போன்றவற்றை வைத்து கண்காணிக்க வேண்டும். இதற்குத் தேவையான பல பரிசோதனை கிராம்களை செய்து டி.எட்.டி எக்கோகாடியோ கிராம் செக் ஆஞ்சியோ கிராம் செய்ய வேண்டும். இரத்த கொதிப்பு சர்க்கரை நோய் கொழுப்புகளை கட்டுப்பாட்டில் வைக்க வேண்டும். இவர்கள் தனது இதயம் பைபாசால் 100 சதவீதம் நலமாக உள்ளது என்று எண்ணாமல் கிராப்ட்களை கண்காணிக்க வேண்டும்.

### என்ன செய்யவேண்டும்

இரத்தக் கொதிப்பு சர்க்கரை நோய் அதிக கெட்டக் கொழுப்புகள் உள்ளவர்களும் இரத்தக்குழாய் அடைப்புள்ளவர்களும் ஸ்டென்ட் சிகிச்சை செய்து ஸ்டென்ட் வைத்துள்ளவர்களும் பைபாஸ் கிராப்ட் வைத்துள்ளவர்களும் தங்களது வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்ள வேண்டும். தனி மனித ஒழுக்கம் மது மங்கை புகை பிடித்தல் இல்லாமல் இயற்கை உணவு வகையிலும் ஒழுக்கநெறியோடும் உடற்பயிற்சி யோகாவும் சிறந்த இதய வல்லுனர் ஆலோசனையின் படி இயத்தைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Windsor TOWER

# Our Dream House



கொழும்பு தமிழ்ச் ... 
நூலகம்



அழகிய இல்லம்
இது ஓர் இனிய வாழ்க்கை

*Civi Mec Construction (Pvt) Ltd.*
(BOI Approved Company)


No. 156-1/1, W.A. Silva Mawatha,
Colombo 06, Sri Lanka.
Tel. 011-2367878 Mobile. 0777 763148

Windsor Tower......
- With Provisional Condominium Approval
- 4.1 Mn onwards
- Loan can be taken from any Banks

Deed can be issued
at the time of occupation

Contact
0777 763148

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org